இன்றைய வேளாண் செய்திகள்

10.12.2012 P.M

11.12.2012 A.M

10th dec 2012 P.M

**கொப்பரை தேங்காய் கொள்முதல் விலையை உயர்த்த டி ஆர் பாலு வலியுறுத்தல்**



கொப்பரை தேங்காய் கொள்முதல் விலையை உயர்த்த நாடாளுமன்றத்தில் திமுக நாடாளுமன்ற குழுத்தலைவர் டி ஆர் பாலு வலியுறுத்தினார்.

இது குறித்து திமுக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், நாடாளுமன்றத்தில் இன்று கொப்பரை தேங்காய்க்கு கொள்முதல் விலையை

உயர்த்தி வழங்குமாறு திமுக நாடாளுமன்ற குழுத்தலைவர் டி ஆர் பாலு வலியுறுத்தியுள்ளார்.

மக்களவையில் இன்றுஇது தொடர்பான கவனஈர்ப்பு தீர்மானத்தை கொண்டுவந்து பேசிய அவர், சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில், கொப்பரை தேங்காயுடன் உரித்த தேங்காயையும் கொள்முதல் செய்ய அரசு முன் வர வேண்டும் என்றார்.

ஆறு மாதங்களுக்கு முன்பு தமிழக முன்னாள் அமைச்சர்கள் கண்ணப்பன், பெரியசாமி, அழகு திருநாவுக்கரசு, பொங்கலூர் நா. பழனிச்சாமி, சட்டமன்ற உறுப்பினர் கம்பம் ராமகிருஷ்ணன் மற்றும் பலர் தம்மை சந்தித்து தமிழகத்தில் தென்னை விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகளை எடுத்துரைத்ததாக அவர் குறிப்பிட்டார்.

அதனை தொடர்ந்து தாம் மத்திய வேளாண் துறை அமைச்ச சரத்பவாரை சந்தித்து இதுபற்றி பேசியதாகவும், ஐக்கிய முற்போக்கு கூட்டணியிலும் இதுபற்றி அதன் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் முன்னிலையில், விவாதிக்கப்பட்டதாகவும் பாலு தெரிவித்தார்.

ஆண்டுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 14 ஆயிரம் தேங்காய்கள் என்ற விகிதத்துடன் தேங்காய் உற்பத்தி திறனில் தமிழகம் முதலிடம் வகிப்பதாக அவர் கூறினார். பத்து லட்சத்துக்கு மேற்பட்ட விவசாயிகளும் ஒரு கோடிக்கும் அதிகமான தொழிலாளர்களும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளதாக கூறிய அவர், பூஞ்சைகள் போன்ற நுண்ணுயிர்களால் ஏற்படும் நோய்களை தடுக்கும் நடைமுறை இதுவரை ஆய்வு நிலையங்களால் உருவாக்கப்படவில்லை என்பதால், விளைச்சல் குறைந்து விவசாயிகள் அவதிக்குள்ளாயிருப்பதாக தெரிவித்தார்.

பருவ மழை பொய்த்து விட்டதாலும், நிலத்தடி நீரை எடுப்பதற்கு தமிழகத்தில் நிலவும் கடும் மின்வெட்டு தடையாக உள்ளதாலும், விவசாயிகள் கடும் அவதிக்குள்ளாகி இருப்பதாக அவர் தெரிவித்தார். தினமும் 17 மணிநேரம் வரை தமிழகத்தில் மின்தடை இருப்பதாக பாலு குறிப்பிட்டார். தண்ணீர் தட்டுப்பாடு, உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் விலை

உயர்வு ஆகியவை காரணமாக விவசாயிகள் சிரமம்படுவதாக அவர் கூறினார். முல்லை பெரியாறு அணை, காவிரி நதி ஆகியவற்றில் இருந்து தமிழகம் தண்ணீர் பெற உரிமை பெற்றுள்ளபோதிலும், தண்ணீர் உரிய அளவிற்கு வருவது இல்லை என்று அவர் தெரிவித்தார். இத்துடன் மத்திய அரசின் கொள்கையும் விவசாயிகளுக்கு உதவுவதாக இல்லை என்றார் அவர்.

கச்சா பாமாயிலுக்கு மானியம் வழங்குவதைவிட அதனை தேங்காய் எண்ணெய்க்கு வழங்கலாம் என்று பாலு வலியுறுத்தினார். அதனை பொது விநியோக திட்டத்தின் வாயிலாக மாநில அரசுகளின் உதவியுடன் மக்களுக்கு விநியோகிக்கலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

கொப்பரை தேங்காய்க்கு தற்போது குறைந்தபட்ச ஆதரவு விலை கிலோ ஒன்றுக்கு 51 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது,இது மிகவும் குறைவானது என்று குறிப்பிட்ட டி ஆர் பாலு, இதனை 75 ரூபாயாக அதிகரித்தால் ஒழிய தென்னை விவசாயிகளின் தற்கொலையை தடுத்து நிறுத்தமுடியாது என்றார். கொப்பரை தேங்காய் விவசாயிகளுக்கு அதற்குரிய கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி கொள்ள முடியும் என்றபோதிலும், சிறு விவசாயிகளுக்கு அது முடியாது என்பதால், அவர்கள் தயாரிக்கும் உரித்த தேங்காயையும் கொள்முதல் மத்திய அரசு முன் வர வேண்டும் என்றார் அவர்.

தேங்காய் மேம்பாட்டு வாரியம் இதுதொடர்பாக எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறிய அவர், நெல், கோதுமை ஆகியவற்றை கொள்முதல் செய்து சேமிப்பதை போலவே தேங்காய்

கொள்முதல் செய்து சேமிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். இல்லை என்றால், தென்னை விவசாயிகள் வேறு தொழிலுக்கு மாறி, உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்ய இறக்குமதியையே நம்பியிருக்க வேண்டி வரும் என்று டி ஆர் பாலு கூறினார். தேங்காய் கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கை 14-லிருந்து 34 ஆக உயர்த்தப்படும் என்று அமைச்சர் அறிவித்தபோதிலும், அது இன்னமும் நடைமுறைப்படுத்த முடியவில்லை என்று கூறிய அவர், தேங்காய் கொள்முதல் செய்த 24 மணி நேரத்தில் அதற்குரிய தொகை வழங்கப்பட்டு விடும் என்ற உறுதி மொழியும் நிறைவேற்றப்படவில்லை என்றார். இதற்கு பதிலளித்த மத்திய வேளாண் துறை இணையமைச்சர் சரண்தாஸ் மகந்த், இப்பிரச்சனை குறித்து பல்வேறு தரப்புகளுடன் விவாதிக்கப்பட்டு வருவதாக கூறினார். ஆனால், இப்பிரச்சனை தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் இணையமைச்சருக்கு இல்லை என்றும், முக்கிய இப்பிரச்சனை தொடர்பாக பதிலளிக்க அவையில் கேபினட் அமைச்சர் இல்லாதது ஏற்கத்தக்கது அல்ல என்றும் கூறி பாலு தலைமையில் திமுக தலைவர்கள் வெளிநடப்பு செய்தனர் என்று கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி பயிற்சி முகாம்**

திருச்சுழி அருகே கல்லூரணி கிராமத்தில் வேளாண்மை துறையின் மூலம் அட்மா திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமுக்கு கல்லூரணி ஊராட்சித் தலைவர் ராஜமாணிக்கம் தலைமை தாங்கினார். தொழில்நுட்ப மேலாளர் பிரேமா பேசும்போது, ஒரு ஹெக்டேருக்கு தேவையான விதையுடன், ஒரு கிலோவுக்கு 10 கிராம் வீதம் சூடோமோனால் புளூரோசன்ஸ் என்ற உயிர்பூசணக்கொல்லி கொண்டு விதை நேர்த்தி செய்வது பற்றி

விளக்கினார். துரைக்கண்ணம்மாள் பூச்சி நோய் நிர்வாகம், பற்றி பேசினார். வேளாண்மை உதவி இயக்குனர் நாச்சியார் அம்மாள் திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்வதால் விதையளவு, தண்ணீர் கூலி ஆட்கள் போன்றவற்றில் குறிப்பிட்ட அளவு சேமிப்பு ஏற்படுகிறது. நீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம் என்று கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை பாலக்கண்ணன், மாரியம்மாள் ஆகியோர் செய்திருந்தனர். இப்பயிற்சியில் 25-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**சூரியஒளி மின்சக்தி மூலம் வேளாண் குளிர்பதன கிடங்கு அமைக்க வணிகர் சங்கங்களின் கூட்டமைப்பு வலியுறுத்தல்**

சூரிய ஒளி மின்சக்தி மூலம் வேளாண் குளிர்பதன கிடங்கு அமைக்க ஈரோடு மாவட்ட அனைத்து வணிகர் சங்கங்களின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரத்துக்கு, இந்த கூட்டமைப்பின் தலைவர் என்.சிவநேசன் சனிக்கிழமை அனுப்பிய மனு விவரம்:

2013-14-ம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் தனிநபர் வருமானவரி விலக்கை ரூ.3 லட்சமாக உயர்த்த

வேண்டும். நேர்முக, மறைமுக வரிகளில் சீராய்வு செய்து வரிவருவாய் அதிகரிக்க வழிசெய்ய வேண்டும்.

'நேரடிவரிகொள்கை' மற்றும் பொருள் மற்றும் சேவை வரிச்சட்டங்கள் உடன் ஏற்புடைய வகையில் அமுல்படுத்த வேண்டும். வங்கிகளில் ரூ.1.50 லட்சம் வரையிலான வீட்டுக்கடனுக்கான வட்டிக்கு வரிவிலக்கு அளிப்பதை குறைந்தபட்சம் ரூ.5 லட்சம் வரை உள்ள கடன்கள் மீதான வட்டி வரை என திருத்தம் செய்ய வேண்டும்.

சிறு, குறு தொழில்கள் மீதான வரிவிலக்கு பெறுவதற்கான குறைந்தபட்ச உற்பத்தி வரம்பு ரூ.1.50 கோடி என்பதை குறைந்தபட்சம் ரூ.5 கோடியாக உயர்த்த வேண்டும்.

தொழில்களுக்கு வழங்கப்படும் கடன்கள் மீதான வட்டியை 7 சதவீதத்துக்குள் அமைக்க வேண்டும்.

கடந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட கோவை, சேலம் தொழில் காரிடார் திட்டத்துக்கு உடனடியாக செயல்வடிவம் கொடுக்க வேண்டும். தேசிய தொழில் கொள்கையை உடனடியாக அறிவிக்க வேண்டும். கழிவுநீரை கடலில் கலக்கும் திட்டத்துக்கு நிதி ஒதுக்க வேண்டும்.

மின் உற்பத்தி திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும். நபார்டு வங்கி மூலம் கடன் பெறாதவர்களுக்கும் சூரியஒளி மின்சக்தி உற்பத்தி செய்ய மானியம் வழங்கவேண்டும்.

ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்படும் ட்யூட்டி ட்ராபேக் ஊக்கத்தொகை தற்சமயம் உள்ள 7.5 சதவீதத்துக்கு பதிலாக 15 சதவீதம் வழங்க வேண்டும்.

அதிக அளவில் கிராமப்புற நவீன தானிய சேமிப்பு குடோன்கள் கட்ட 75 சதவீதம் வரை மானியம் வழங்க வேண்டும். கேரளாவில் உள்ளது போல வணிகர்களுக்கான ஓய்வூதியம் திட்டம் கொண்டுவர வேண்டும். ஜவுளி தொழில் மீதான கலால்வரி முற்றிலும் நீக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

## விதை கிராம திட்டத்தில் விவசாயிகளுக்குப் பயிற்சி

விதை கிராமத் திட்டத்தின் கீழ், செய்யாறை அடுத்த ஏனாதவாடி கிராமத்தில் 100 விவசாயிகளுக்கு மணிலா விதை உற்பத்தி செய்யும் பயிற்சி வெள்ளிக்கிழமை அளிக்கப்பட்டது.

வேளாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, ஊராட்சி மன்றத் தலைவர் ராமமூர்த்தி தலைமை வகித்தார். செய்யாறு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி, கவுன்சிலர் அன்பு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு தொழில்நுட்பக் கையேடுகள் வழங்கப்பட்டன

## விதை உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு பயிற்சி

திருச்செங்கோடு வட்டம், எலச்சிபாளையம் அருகேயுள்ள இலுப்புலியில் விதை கிராமத் திட்டத்தின் கீழ், தரமான விதை உற்பத்தி செய்வது குறித்த பயிற்சி சனிக்கிழமை நடைபெற்றது.
இலுப்புலி ஊராட்சித் தலைவர் செல்வராணி முத்துசாமி தலைமை வகித்தார். வேளாண் உதவி இயக்குநர் முரளிதரன் வரவேற்றார். ஓய்வு பெற்ற நாமக்கல் தோட்டக் கலை உதவி இயக்குநர் அசோகன் பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள், இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம் மற்றும் உயிர் உரங்கள் பயன்பாடுகள் பற்றி விளக்கினார். வேளாண் அலுவலர் தண்டபாணி மண் பரிசோதனையின் அவசியம் குறித்துப் பேசினார்.
நாமக்கல் மாவட்ட விதைச் சான்று உதவி இயக்குநர் சுப்பிரமணியம் தரமான விதைகளை உற்பத்தி செய்வது குறித்தும், விதைப்பண்ணை அமைப்பது குறித்தும் பேசினார். மானியத் திட்டங்கள் குறித்து வேளாண் அலுவலர் கோமதி எடுத்துரைத்தார். பயிற்சி முகாமில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக் காட்சிகளை விவசாயிகள் பார்வையிட்டனர்.

## வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் சேர அழைப்பு

வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் பங்கேற்க விவசாயிகள் சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கத்தை அணுகலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதுகுறித்து பயிர்க் காப்பீட்டுத் திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வ. பழனியப்பன் தெரிவித்திருப்பது:
வேளாண் காப்பீட்டுத் திட்டத்துக்குச் செலுத்த வேண்டிய மொத்த பிரிமிய தொகையில் மானியம் போக, கடன் பெறாத விவசாயிகள் ரூ. 78, கடன் பெறும் விவசாயிகள் ரூ. 84 மட்டும் பிரிமியமாக செலுத்த வேண்டும்.
இதற்கான கடைசி நாள் கடன் பெறாத விவசாயிகளுக்கு டிச. 15. கடன் பெறும் விவசாயிகளுக்கு டிச. 31. இதுவரை பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேராத விவசாயிகள் உடனடியாக சம்மந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கத்தில் அதற்கான விண்ணப்பத்தை நிறைவு செய்து, சிட்டா அடங்கலுடன் கொடுக்க வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் அனைத்து வேளாண்மை உதவி இயக்குநர்கள் அலுவலகம், வட்டார காப்பீட்டுத் திட்ட முகவர்கள், திருவையாறு எம்.எஸ். சுவாமிநாதன் ஆய்வு, கிராம அறிவு மையம் ஆகிய இடங்களில் உள்ளன. மேலும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி சாலையில் நடராஜபுரம் தெற்கு பகுதி 5-வது குறுக்குச் சாலையில் கதவு எண் 122-ல் இயங்கும் காப்பீட்டுத் திட்டச் சேவை மையத்திலும் பெற்றுக் கொள்ளலாம். சிட்டா அடங்கல் ஒவ்வொரு கிராமத்துக்கும் மொத்தமாகப் பெற தக்க ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் செய்துள்ளது. விண்ணப்பங்களை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கத்திலேயே நிறைவு செய்ய தகுந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசு விவசாயி செலுத்த வேண்டிய சாதாரண பிரிமியத் தொகையை மட்டுமே செலுத்தும். இதுதவிர, கூடுதல் பிரிமியம் செலுத்த

விரும்புபவர்கள் அதற்கான பிரிமிய தொகையை அவர்களே செலுத்த வேண்டும். மேலும் விவரங்களுக்கு, 94437 80661 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## திருவாரூர் விவசாயிகள் கவனத்துக்கு ....

விவசாயிகள் செலுத்த வேண்டிய பயிர் காப்பீட்டுத் தொகையை அரசே செலுத்தவுள்ளது எனத் தெரிவித்துள்ளார் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

இதுகுறித்து ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

காவிரிப் பாசனப் பகுதிகளில் சாகுபடி பரப்பளவை அதிகரிக்கவும், உற்பத்தியைப் பெருக்கவும் தமிழக அரசு நிகழாண்டு சம்பா சிறப்புத் தொகுப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி செயல்படுத்தியுள்ளது. விவசாயிகளுக்கு மேலும் சில சலுகைகளை அறிவிக்கும் வகையில் 2013 பிப்ரவரி வரை நாள்தோறும் 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படும்.

டீசல் மானியம் ஏக்கருக்கு ரூ.600, 180 மீட்டர் நீள எச்டிபிஇ குழாய்கள் வாங்க 100 % மானியமாக அலகு ஒன்றுக்கு ரூ.20,000, 100 மீட்டர் நீள வளையக்கூடிய குழாய்கள் 100 % மானியத்தில் அலகு ஒன்றுக்கு ரூ.2,800 வழங்கப்படுகிறது.

காய்ந்து போகும் நிலையில் உள்ள பயிர்களை காக்க பல்வகை நீர்த்தெளிப்பான்கள் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மூலம் தேவைப்படும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. 7 முதல் 10 நாட்கள் வரை வறட்சியைத் தாங்கக் கூடிய மீயுரிடேட் ஆப் பொட்டாஷ் உரம் மற்றும் பின்க் பிக்மென்ட் பேக்கல்டேட்டிவ் மெத்திலோட்ரோப் ஆகியவை தேவைக் கேற்ப பயிர்கள் மீது வேளாண் அறிவியல் நிலையம் மூலம் தெளிக்கப்படும். தண்ணீர்த் தேவையை குறைக்கும் வகையில் சிறிய நடமாடும் தெளிப்பான்கள் தேவைப்படும் விவசாயிகளுக்கு வழங்கப்படும். சம்பாவை காப்பாற்ற புதிய உத்திகளை விவசாயிகளுக்கு எடுத்துக்கூறும் வகையில் கிராமம் தோறும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும். விவசாயிகள் செலுத்தவேண்டிய காப்பீடுத் தொகையை அரசே செலுத்தும். இதற்காக கடன்பெறாத விவசாயிகளிடமிருந்து கிராம்தோறும் விண்ணப்பங்கள் வாங்கப்படுகிறது.

## டெல்டா மாவட்டங்களை ஏமாற்றிய பருவமழை

நிகழாண்டு காவிரியில் தண்ணீர் வராத நிலையில், டெல்டா மாவட்டங்களில் பருவமழையும் எதிர்பார்த்த அளவுக்குப் பெய்யவில்லை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆண்டு இயல்பான மழை அளவு 1,306 மி.மீ. ஆனால், நிகழாண்டு இதுவரை 690.78 மி.மீ. மட்டுமே மழை பெய்துள்ளது.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட தென்மேற்குப் பருவமழை நிகழாண்டு குறைவாகப் பெய்தது. மாவட்டத்தில் தென்மேற்கு பருவ மழையின் இயல்பான அளவு 296 மி.மீ. ஆனால், நிகழாண்டில் சராசரியாக 226.92 மி.மீ. மட்டுமே பெய்தது. இதுவும், ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் மட்டுமே ஓரளவுக்கு கணிசமான அளவுக்குப் பெய்தது. ஆகஸ்ட் மாதத்தில் 82.92 மி.மீ., செப்டம்பரில் 102.03 மி.மீ. மழையளவு பதிவானது.

வடகிழக்குப் பருவமழையும் அக்டோபர் மாத பிற்பகுதியில் மட்டுமே எதிர்பார்த்த அளவுக்கு இருந்தது. அப்போது, பல இடங்களில் இளம் சம்பா பயிர்கள் தண்ணீரில் மூழ்கும் அளவுக்குத் தொடர் மழை பெய்தது.

அக்டோபர் மாதத்தில் சராசரியாக தஞ்சாவூர் மாவட்டத்தில் 341.28 மி.மீ., நாகை மாவட்டத்தில் 626.06 மி.மீ., திருவாரூர் மாவட்டத்தில் 531.77 மி.மீ. மழை பெய்தது. இதில், மாநிலத்திலேயே அதிக மழையளவு பட்டியலில் நாகை மாவட்டம் முதலிடத்திலும், திருவாரூர் மாவட்டம் இரண்டாமிடத்திலும் இருந்தன.

ஆனால், நவம்பர் மாதத்தில் எதிர்பார்த்த அளவுக்கு மழை பெய்யவில்லை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 92.91 மி.மீ. மட்டுமே பெய்தது. இது, இயல்பான மழையளவை (288 மீ.மீ.) விட 196.91 மி.மீ. குறைவு. டிசம்பர் மாதத்தில் இயல்பான மழையளவான 164 மி.மீ.க்கு பதிலாக இதுவரை 1.6 மி.மீ. மட்டுமே பெய்துள்ளது.

எனவே, வடகிழக்குப் பருவ மழையைப் பொருத்தவரையில், தஞ்சாவூர் மாவட்டத்தில் 651 மி.மீ.க்குப் பதிலாக இதுவரை 435.88 மி.மீ. மட்டுமே பெய்துள்ளது.

வடகிழக்குப் பருவமழை கடந்த ஆண்டு நாகை மாவட்டத்தில் 826.93 மி.மீ., திருவாரூர் மாவட்டத்தில் 755.93 மி.மீ. பெய்தது. ஆனால், நிகழாண்டில் நாகை மாவட்டத்தில் 741.56 மி.மீ., திருவாரூர் மாவட்டத்தில் 636.67 மி.மீ. மட்டுமே மழையளவு பதிவானது. இவற்றில், அதிக அளவு அக்டோபர் மாத பிற்பகுதியில் பெய்தது.

இதுகுறித்து தமிழ்நாடு மூத்த வேளாண் வல்லுநர் பேரவையைச் சேர்ந்த வ. பழனியப்பன் தெரிவித்தது:

டெல்டா மாவட்டங்களில் நிகழாண்டு வடகிழக்குப் பருவமழை முன்கூட்டியே அதிக அளவில் பெய்துவிட்டது. இனிமேல் மழை பெய்தாலும் பயிருக்குப் பயனுள்ளதாக இருக்காது.

பயிர்கள் பூக்கும் தருணமான டிசம்பர் இறுதியில் மழை பெய்தால், பூக்கள் கொட்டிவிடும்.

இதனால், மகசூலில் மிகப் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படும். இதேபோல, 2010 ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்தில் பெய்த மழை காரணமாக மகசூல் பாதிப்பு ஏற்பட்டது என்றார் பழனியப்பன்.

எனவே, நிகழாண்டில் காவிரியில் நீர்வரத்து இல்லாததுடன், பருவமழையும் எதிர்பார்த்த அளவுக்குப் பெய்யாததால், டெல்டா மாவட்டங்களில் ஆற்றுப் பாசனத்தைச் சார்ந்துள்ள சம்பா பயிர்கள் காய்ந்து கொண்டிருக்கின்றன.

பல இடங்களில் சம்பா பயிரிடப்பட்டுள்ள வயல்களில் தண்ணீர் இல்லாததால் வெடிப்பு காணப்படுவதுடன், பயிர்களும் பசுமை நிறத்திலிருந்து, மஞ்சள் நிறத்துக்கு மாறி வருகிறது.

10.12.2012 P.M

11.12.2012 A.M

**பிசான சாகுபடிக்கு தண்ணீர் வழங்காமல் புறக்கணிப்பு தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு பலகோடி இழப்பு**

ஸ்ரீவைகுண்டம் : தாமிரபரணி பாசனத்தில் பிசான சாகுபடிக்கு தண்ணீர் வழங்குவதில் தூத்துக்குடி மாவட்டம் புறக்கணிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகளுக்கு தொடர்ந்து ஏற்பட்டு வரும் பாதிப்பு களை சரிசெய்ய உடனடியாக அரசின் அறிவிப்பை அமுல் படுத்தி தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு தண்ணீர் தர வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.இது குறித்து தாமிரபரணி நதிநீர் பாதுகாப்பு பேரவை அமைப்பாளர் நயினார் குலசேகரன் ஸ்ரீவைகுண்டம் பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் நம்பி ராஜனிடம் கொடுத்துள்ள கோரிக்கை மனுவில் கூறி யிருப்பதாவது, தாமிரபரணி பாசனத்தில் திருநெல்வேலி தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 86107 ஏக்கர் நிலங் களுக்கு பிசான சாகுபடிக்கு அனுமதியளித்து பாபநாசம் அணையிலிருந்து தண்ணீர் திறக்க நவம்பர் 15ம் தேதி அரசு ஆணைபிறப்பித்தது. ஆனால் இதுவரை தூத்துக் குடி மாவட்டத் திலுள்ள 46107 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் தரப்படவில்லை. அரசின் அனுமதியை நம்பி விதை நெல்லையும் தேவை யான உரங்களையும் வாங் கிய விவசாயிகளுக்கு நாற்று போடக்கூட பாசன குளங் களில் தண்ணீர் இல்லாத அவல நிலை உள்ளது. பாபநாசம் அணையிலிருந்து சுமார் 1000கனஅடி தண்ணீ ருக்கும் குறைவாகவே தண்ணீர் எடுக்கப்படு கின்றது. அத்தண்ணீரையும் திருநெல்வேலி மாவட்டத் திலுள்ள 7 பிரதான வாய் காலில் மட்டும் விடப்பட்டு தூத்துக்குடி மாவட்டத் திலுள்ள பாசன நிலங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. ஏற்கனவே கார் மற்றும் முன்கார் சாகுபடிகளை இழந்த விவசா யிகள் பிசான சாகுபடியையும் இழக்க வேண்டியது வரு மோ என்ற கலக்கத்தில் உள்ளனர். அரசால் அறிவிக் கப்பட்ட அனைத்துப் பகுதி களுக்கும் பாரபட்சம் இல்லா மல் தண்ணீர் தரவேண்டியது பொதுப்பணித்துறை அதி காரிகளின் பொறுப்பாகும். எனவே பாபநாசம் அணை யிலிருந்து கூடுதலா கவும் மணிமுத்தாறு அணையி லிருந்தும் தண்ணீர் திறந்து தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளை காப்பாற்ற வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். என குறிப் பிடப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத் தில் கார் மற்றும் முன்கார் சாகுபடி காலங்களில் அரசு அறிவித்த நிலங்களுக்கு கூட தண்ணீரை பெற்றுத்தராத தினால் விவசா யிகள் ஆர்பாட்டம், சாலை மறியல், உண்ணாவிரதம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர். ஆனால் இறுதி வரை தண்ணீர் வழங்காத தால் விவசாயிகளுக்கு பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. தற்போது பிசான சாகுபடியிரும் அரசு அறிவித் தப்படி தண்ணீரை பெற்றுத் தருவதில் மாவட்ட நிர்வாகம்

தொடர்ந்து அலட் சியமாக செயல்படு கிறது. தொழிற் சாலை களுக்கு தண்ணீர் வழங்கு வதில் காட்டும் ஆர்வத்தையும் அவசரத் தையும் விவசாயி களுக்கு தண்ணீர் பெற்று தருவதிலும் காட்ட வேண் டும் எனவும் மக்களால் தேர்தெடுக்கப் பட்ட மக்கள் பிரதிநிதிகளும் விவசாத்திற்கு தண்ணீர் பெற்று தந்து சாகுபடிகளுக்கு உத்திரவாதம் தர வேண்டு மென விவசாயி களும் சமுக நல ஆர்வலர் களும் கோரிக்கை விடுத்துள் ளனர்.

## வறட்சியில் பேரிச்சை விளைச்சல் அமோகம்

ஈரோடுஈரோடு மாவட்டம் பெருந்துறை அடுத்த நல்லாம்பட்டியில், வறட்சியிலும் பேரிச்சை மரத்தின் வளர்ச்சியும், விளைச்சலும் அமோகமாக இருப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.ஈரோடு மாவட்டத்தில் பருவமழை பொய்த்துப்போனதால், பெரும்பாலான விவசாய நிலங்கள் வறட்சியின் பிடியில் சிக்கியுள்ளது.வறண்ட நிலங்களை காண முடியாமல், ரியல் எஸ்டேட் அதிபர்களுக்கு, கூறு போட்டு, விவசாய நிலங்களை, விவசாயிகள் விற்று வருகின்றனர்.இந்நிலையில், வறட்சியிலும் அதிக விளைச்சலை தரக்கூடிய, எள், கரும்பு உள்ளிட்ட பயிர்களை, விவசாயிகள் சாகுபடி செய்தனர்.ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே, நல்லாம்பட்டியில், பேரிச்சை மரம் வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.வறட்சியிலும், பேரிச்சையின் விளைச்சல் ஜோராக இருப்பதாலும், அதிக பேரிச்சம் பழம் கிடைப்பதாலும், விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். இதுகுறித்து நல்லாம்பட்டி விவசாயி அப்துல் கூறியதாவது:தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணாபுரம் பகுதியில் இருந்து, பேரிச்சை மர கன்றுகளை விலைக்கு வாங்கி, நல்லாம்பட்டியில் வளர்த்து வருகிறேன். பொதுவாக, பாலைவனத்தில், காற்றின் ஈரப்பதம், காற்றையும் சுவாசித்து, ஓங்கி வளரும் தன்மையை, பேரிச்சை பெற்றுள்ளது.ஈரோடு மாவட்டத்தில் நிலவும் வறட்சியிலும், பேரிச்சை மரம் நன்கு வளர்கிறது. சொட்டு நீர் பாசனத்தின் மூலம், பேரிச்சை மரக்கன்றுகளை வளர்த்து வருகிறேன். தர்மபுரியில், ஹைபிரைடு மரங்கள் ஒரு கன்று, 2,500 ரூபாய்க்கும், சாதாரண கன்று ஒன்று, 60 ரூபாய்க்கும் விற்பனையாகிறது.நன்கு வளர்ந்த ஹைபிரைடு பேரிச்சை மரம், ஆறு ஆண்டு வரையும், சாதாரண ரக மரம், மூன்று ஆண்டும், பேரிச்சையை தரும். ஒரு கிலோ பேரிச்சை, 200 முதல், 230 ரூபாய் வரை விற்பனையாவதால், பேரிச்சை மர வளர்ப்பில் நட்டம் ஏற்படுவது குறைவு.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## நீரின்றி வறண்ட வேர்க்கடலைஉதவி தொகை க்கு கோரிக்கை

ஈரோடுஈரோடு மாவட்டத்தில், போதிய மழையில்லாததால், வேர்க்கடலை விளைச்சலின்றி, வறண்டது.ஈரோடு மாவட்டத்தில், பருவமழை பொய்த்ததால், பெரும்பாலான விவசாய பயிர்கள் கருகின. போதிய விளைச்சல் இன்றி, விவசாய நிலங்களை, ரியல் எஸ்டேட் அதிபர்களுக்கு விற்ற விவசாயிகள், கூலி வேலைக்கு சென்றனர்.ஈரோடு மாவட்டத்தில் நிலவும் வறட்சியால், நெல், மஞ்சள், வாழை, கரும்பு பயிரிட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில், கடும்

வறட்சியால், வேர்க்கடலையின் விளைச்சலும் பாதிக்கப்பட்டது.இதுகுறித்து பெருந்துறை விவசாயி மாரிமுத்து கூறியதாவது:நிலக்கடலை உற்பத்தியில் குஜராத் முதல் இடத்திலும், அதைத்தொடர்ந்து ஆந்திரா, ராஜஸ்தான், கர்நாடகா, தமிழகம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் உள்ளன. தமிழகத்தில் நிலக்கடலை பயிரிடும் பரப்பளவு, 4.59 லட்சம் எக்டேராகவும், மொத்தம் உற்பத்தி, 10.26 லட்சம் டன்களாகவும், உற்பத்தி திறன் எக்டேருக்கு, 1,775 கிலோ என்ற அளவில் உள்ளன.தமிழகத்தில் ஆடிப்பட்ட நிலக்கடலை முக்கிய விதைப்பரவங்களில் ஒன்றாகும். உள்நாடு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது ஆய்வு முடிவுகளின் படி அறுவடைக் காலத்தில் (2012 அக்டோபர் - நவம்பர்) எண்ணெய் பிரித்தெடுத்தல் நோக்கத்துக்காக, நிலக்கடலை பருப்பு கிலோ, 46 முதல் 48 ரூபாய் வரை விலை கிடைக்க வாய்ப்பிருந்தது.ஈரோடு மாவட்டம் பெருந்துறையில், நூற்றுக்கணக்கான ஏக்கரில், நிலக்கடலையை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். போதிய பருவமழை இல்லாததால், நிலக்கடலை பயிர் கருகியதால், விவசாயிகள் அதிருப்தியில் உள்ளனர்.கருகிய வேர்க்கடலை பயிருக்கு ஏற்ப, நிதியுதவி வழங்கி, விவசாயிகளை அரசு காக்க வேண்டும்.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## அறிவியல் நிலையத்தில் மரச்சாகுபடி கருத்தரங்கம்

திண்டிவனம்: திண்டிவனத்தில் மரச் சாகுபடி விவசாயிகளுக்கான கருத்தரங்கம் நடந்தது. இந்திய வன ஆராய்ச்சிமற்றும் விரிவாக்க குழும தலைமை இயக்குனர் பகுகுனா தலைமையில் நடந்தது. திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையத்தில், மரச்சாகுபடி விவசாயிகளுக்கான ஒரு நாள் கருத்தரங்கம் நடந்தது. திண்டிவனம் அறிவியல் நிலைய முனைவர் சாத்தையா வரவேற்ற ர். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விரிவாக்கக்கல்வி இயக்குனர் முனைவர் கலைச்செல்வன் முன்னிலை வகித்தார். இந்திய வன ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க குழுமத்தின் தலைமை இயக்குனர் பகுகுனா ஐ.எப்.எஸ்., சிறப்புரையாற்றினார். பின்னர், திண்டிவனம் அறிவியல் நிலையத்தில் உள்ள சவுக்கு மாதிரி பண்ணையில் சவுக்கு மரக்கன்றுகளை நட்டு, சாகுபடியை துவக்கி வைத்தார். இந்த பணியில் ஈடுபட்டிருக்கும் சி.சுப்ரமணியம் வேளாண் பட்டய படிப்பு மாணவ, மாணவிகளிடம் அவர் பேசியதாவது: வேளாண் துறையும், வன துறையும் இணைந்து செயல்படும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. மத்திய வனத்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கி வரும் வன ஆராய்ச்சி மையம், மரப்பெருக்கு உயர் தொழில் நுட்பம் குறித்து கருத்தரங்குகள், துண்டு பிரசுரங்கள் மூலம் பரவலாக்கம் செய்து வருகிறது. வன அறிவியல் மையங்கள் துவக்கப்பட்டு தரமான நாற்றுகள், குளோன்ஸ் உள்ளிட்ட விவசாயிகளுக்கு தேவையான தகவல்கள் வழங்கப்படும். இவ்வாறு பகுகுனா பேசினார். கோவை வன ஆராய்ச்சி இயக்குனர் விஜயகுமார், முதன்மை வன பாதுகாவலர் சீனுவாசமூர்த்தி, முனைவர் ரவிச்சந்திரன் ஆகியோர் விளக்கவுரையாற்றினர். வேளாண் பல்கலைக்கழக விரிவாக்க இயக்குனர்

கலைச்செல்வன் மற்றும் அறிவியல் நிலைய முனைவர்கள் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**முருங்கைக்காய் திடீர் விலை உயர்வு**

அவலூர்பேட்டை: அவலூர்பேட்டை பகுதியில் முருங்கைக்காய் விலை திடீரென உயர்ந்தது. அவலூர்பேட்டையில் நேற்று முன்தினம் ஒரு கிலோ 170 ரூபாய்க்கும், நேற்று 150க்கும் விற்றனர். கடைகளில் 60 ரூபாய்க்கு விற்கப்படும் முருங்கைக்காய் இந்தளவு விலை ஏறியதால், குறைந்த அளவே வியாபாரிகள் விற்பதற்காக வாங்கி வந்தனர். நடுத்தர மக்கள் முருங்கைக்காய் விலை திடீரென அதிகரித்ததால் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

**நெல் ஆராய்ச்சி நிறு வனத்திற்கு விவசாயிகள் கண்டுனர் சுற்றுலா**

விழுப்புரம்: கோலியனூர் வேளாண்துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகள் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கண்டுனர் சுற்றுலா சென்றனர்.
கோலியனூர் வேளாண் துறை மூலம் அட்மா திட்டத்தின் கீழ் 50 விவசாயிகளுக்கு சிறப்பு நேரடி பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்காக விவசாயிகள், தஞ்சாவூர் மாவட்டம் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் ஆடுதுறைக்கு நேரில் அழைத்து செல்லப்பட்டு, அங்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில், நெல்லியில் பூச்சி கட்டுப்பாடு நோய் பராமரிப்பு, புதிய ரகங்கள், திருந்திய நெல் சாகுபடி பற்றி எடுத்துரைத்தனர். விவசாயிகள் சென்ற கண்டுனர் சுற்றுலாவை வேளாண்மை உதவி இயக்குனர் செல்வசேகர் துவக்கி வைத்தார். உதவி விதை அலுவலர் கருணாநிதி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேன்மொழி, தொழில்நுட்ப அலுவலர்கள் தேவதாஸ், நடராஜ் ஆகியோர் கண்டுனர் சுற்றுலா விவசாயிகளை வழி நடத்திச் சென்றனர்.

**மூலிகை பயிர் மேம்பாடு விழிப்புணர்வு முகாம் .**

ஆத்தூர்: ஆத்தூர் அருகே தனியார் தொண்டு நிறுவனம் சார்பில், விவசாயிகளுக்கு நில மேம்பாட்டுடன் கூடிய மூலிகை பயிர் மேம்பாடு மற்றும் சுற்றுசூழல் விழிப்புணர்வு முகாம் நடந்தது.ஆத்தூர் அருகே அம்மம்பாளையம் பஞ்சாயத்தில், ராமசாமி அய்யர் பவுன்டேசன் மற்றும் பவர் தொண்டு நிறுவனம் சார்பில் நடந்த, நில மேம்பாட்டுடன் கூடிய மூலிகை பயிர் மேம்பாடு குறித்து சுற்றுசூழல் விழிப்புணர்வு முகாமிற்கு, பஞ்சாயத்து தலைவர் செல்வராணி தலைமை வகித்தார்.அதில், நவீன விவசாயத்தின் மூலம் பூச்சிக் கொல்லி மருந்து, ரசாயன உரங்கள் அதிகளவு பயன்படுத்துவதால், மக்களுக்கு நோய் தாக்கம் ஏற்படுகிறது. அதை தவிர்த்து, இயற்கை விவசாயத்தின் மூலம் பாரம்பரிய கம்பு, கேழ்வரகு, சோளம், தினை, பனிவரகு, சாமை போன்ற உணவு தானியங்களை உற்பத்தி செய்து, உணவாக சேர்த்துக் கொள்ள வேண்டும்.மண்புழு உரம் தயாரித்து, இயற்கை விவசாயம், மூலிகை பயிர் சாகுபடி செய்து, நோய் தாக்கதில் இருந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.பள்ளி மாணவ, மாணவியருக்கு

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து கட்டுரைப்போட்டி மற்றும் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன.முகாமில், பவர் தொண்ட நிறுவன இயக்குனர் ஜெகதாம்பாள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**பால் , இறைச்சி பொருள் பதப்படுத்தமானியம் : வேளாண் அதிகாரி தகவல்**

நாமக்கல்: "பால் பொருட்கள் மற்றும் இறைச்சியை பதப்படுத்த, 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. அதற்கு, தகுதியான நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது' என, மாவட்ட ÷வளாண் துணை இயக்குனர் விசுவநாதன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகம் மற்றும் தமிழக அரசு சார்பில், 12வது ஐந்தாண்டு திட்டத்தில், புதிய மத்திய அரசுத் திட்டமாக, தேசிய உணவு பதப்பத்தும் இயக்க திட்டத்தை, 2012ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட உள்ளது.நாமக்கல் மாவட்டத்தில், மாவட்ட கலெக்டர் தலைமையில், 11 உறுப்பினர்களை கொண்டு மாவட்ட உணவு பதப்படுத்தும் இயக்கக்குழு அமைக்கப்பட்டுள்ளது.பால், பால் பொருட்கள், இறைச்சி மற்றும் இறைச்சி பதப்படுத்துதல் (ஆடு, கோழி, பன்றி மற்றும் மாட்டிறைச்சி) கடல் சார்ந்த பொருட்களான கடல் உணவு, மீன், இறால் மற்றும் அவற்றின் பதப்படுத்தப்பட்ட பொருட்கள் தயாரிக்க, இடத்தில் இருந்து விற்பனை வரை கொண்டு செல்ல குளிர்பதன தொடர் சங்கிலி போன்ற கட்டுமான அமைப்புகள் அமைக்கப்படும்.அதில், பண்ணை அளவில் சிறிய பதப்படுத்தும் நிலையம், எடைமேடை, சுத்தப்படுத்தி தரம் பிரித்தல், பேக்கிங், பதப்படுத்துவதற்கு முன் குளிர்ச்சி ஏற்படுத்துதல், கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலை, மாற்றியமைக்கக் கூடிய சூழ்நிலை, குளிர்பதன கிடங்கு, சாதாரண கிடங்கு ஆகியவை அமைத்தல்.நடமாடும் குளிர்ச்சி வாகனங்கள் மற்றும் ரீபர் டிரக் வாங்குதல், பலவகை பொருட்களுக்கான மாற்றியமைக்க கூடிய சூழ்நிலையுடன் கூடிய குளிர் பதன சேமிப்பு அறை, மாறுபட்ட ஈரப்பதம் கூடிய அறைகள், பேக்கிங் வசதி, உறை பனி சேமிப்பு போன்ற கட்டமைப்புகள் அமைத்தல். கதிரியக்க வசதி.இதற்கான தகுதி, தனிநபர், தொழில் முனைவோர் குழுக்கள், கூட்டுறவு, தொழில் முனைவோர் பங்குதார நிறுவனங்கள், சங்கங்கள், நிறுவனங்கள் மற்றும் கார்ப்ரேஷன், பதிவு செய்யப்பட்ட சங்கங்கள். திட்ட மதிப்பீட்டில், 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். அதிகப்பட்ச வரம்பு பத்து கோடி ரூபாய்.மாவட்ட தொடர்பு முகமையான, நாமக்கல் வேளாண் துணை இயக்குனர் மூலம், மாவட்ட உணவு பதப்படுத்தும் இயக்கக்குழுவால் பரிந்துரைக்கபபட்டு மாநில உணவு பதப்படுத்தும் இயக்க இயக்குனர், மாநில இயக்கக்குழுவால் நியமிக்கப்பட்ட அலுவலரிடம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

**பனிப்பொழிவில் செழிப்பாக வளர்ந்துள்ள சூரியகாந்தி செடிகள் : விவசாயிகள் மகிழ்ச்சி**

சிறுபாக்கம்: சிறுபாக்கம், வேப்பூர் பகுதிகளில் கடும் பனிப்பொழிவு காரணமாக சூரியகாந்தி செடிகள் செழிப்பாக வளர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். சிறுபாக்கம், ராமநத்தம், மங்களூர், வேப்பூர் உட்பட 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் மானாவாரியில் பருத்தி, மக்காச்சோளம், வரகு, வேர்க்கடலை பயிர் செய்யப்படுவது வழக்கம். ஆண்டுதோறும் மழைக்காலம் முடிந்த பின்னர், வயலிலுள்ள ஈரப்பதம், தொடர்ந்து பெய்யும் பனிப்பொழிவை பயன்படுத்தி, கடுகு, மல்லி, சூரியகாந்தி உள்ளிட்டவைகளை விவசாயிகள் பயிர் செய்வார்கள். தற்போது போதிய மழை இல்லாத நிலையில், அவ்வப்போது பெய்த லேசான மழையை பயன்படுத்தி சிறுபாக்கம், வேப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் சூரியகாந்தியை ஒரு மாதத்திற்கு முன் பயிர் செய்தனர். கடந்த இரண்டு வாரங்களாக இப்பகுதியில் கடும் பனிப்பொழிவு உள்ளது. பனியின் ஈரப்பதம் காரணமாக சூரியகாந்தி செடிகள் செழிப்பாக வளர்ந்து, பசுமையாக உள்ளன. இதனால், இந்தாண்டு சூரியகாந்தி அதிகளவு விளைச்சல் இருக்குமென விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## தேங்காய் கொள்முதல் விலை உயர்வு :தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி

கோவை : தேங்காய் சீசன் நிறைவடைந்துள்ள நிலையில், வரத்து குறையத் துவங்கியுள்ளதால், தேங்காய் விலை உயரத்துவங்கியுள்ளது. இதனால், தென்னை விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.தேங்காய் வரத்து மூன்று மடங்கு குறைந்துள்ளது. இதனால், சந்தையில் தேங்காய்க்கு அதிக தேவை ஏற்பட்டு, விலை உயரத்துவங்கியுள்ளது. கடந்த ஓராண்டாக விலை வீழ்ச்சியை நோக்கி சென்று கொண்டிருந்து, தேங்காய் வர்த்தகம் கடந்த ஒருவாரமாக உயரத்துவங்கியுள்ளதால், தென்னை விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.காங்கேயம் மார்க்கெட்டில் கடந்த வார விலை நிலவரம்:கொப்பரை கிலோ 39.50 ரூபாய்; தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின் 820 ரூபாய்; தேங்காய் ஒரு டன்னுக்கு (நார் முழுவதும் நீக்கியது) 12,500 ரூபாய்; தேங்காய் பவுடர் கிலோவுக்கு 58 ரூபாய் விலை கிடைத்தது.தென்னந்தோப்பில் (வியாபாரிகள் சொந்த பொறுப்பில் தேங்காய் பறித்துக்கொள்ள) ஒரு தேங்காய்க்கு 4.50 முதல் ஐந்து ரூபாய்; விவசாயிகள் பறித்து இருப்பு வைத்திருக்கும் தேங்காய் ஒன்றுக்கு அதிகபட்சம் 5.50 ரூபாய் விலை கிடைத்தது.நேற்றைய நிலவரம்:கொப்பரை கிலோ 47 - 48 ரூபாய்; தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின் 950 - 975 ரூபாய்; தேங்காய் ஒரு டன்னுக்கு (காய்ந்தது) 15,500 ரூபாய், இளம் தேங்காய் 14 ஆயிரம் ரூபாய், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 65 ரூபாய் விலை கிடைத்தது. தென்னந்தோப்பில் பறித்து இருப்பு வைத்திருக்கும் தேங்காய் ஒன்றுக்கு எட்டு ரூபாய் வரையிலும், வியாபாரிகள் சொந்த பொறுப்பில் பறித்துக்கொள்வதற்கு ஒரு தேங்காய்க்கு 6.50 முதல் ஏழு ரூபாய் வரையிலும் விலை கொடுக்கப்பட்டது.கொப்பரை உற்பத்தியாளர் சங்க தலைவர் தங்கவேல் கூறியதாவது:கர்நாடகா, ஆந்திரா, கேரளாவிலும் தேங்காய் உற்பத்தி குறைந்து விட்டது.இந்நிலையில் தமிழகத்திலும் கடந்த ஒருமாதமாக தேங்காய் வரத்து

குறைந்துள்ளதால், விலை உயரத்துவங்கியுள்ளது. சீசன் கால வரத்தில் தற்போது 30 சதவீதம் மட்டுமே உள்ளது. இதனால், தேங்காய் சார்ந்த பொருட்களின் விலை கணிசமாக உயர்ந்து வருகிறது.கடந்த ஒருவாரத்தில் கொப்பரை கிலோவுக்கு ஏழு ரூபாயும், தேங்காய் டன்னுக்கு மூவாயிரம் ரூபாயும் உயர்ந்துள்ளது. வரும் மார்ச் மாதம் வரையிலும் தேங்காய் விலையில் சரிவு இருக்காது. அதனால், தேங்காய், கொப்பரை இருப்பு வைத்து விற்றால் லாபம் கிடைக்கும்இவ்வாறு தங்கவேல் கூறினார்.

**வறட்சியில் பேரிச்சை விளைச்சல் அமோகம்**

ஈரோடுஈரோடு மாவட்டம் பெருந்துறை அடுத்த நல்லாம்பட்டியில், வறட்சியிலும் பேரிச்சை மரத்தின் வளர்ச்சியும், விளைச்சலும் அமோகமாக இருப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.ஈரோடு மாவட்டத்தில் பருவமழை பொய்த்துப்போனதால், பெரும்பாலான விவசாய நிலங்கள் வறட்சியின் பிடியில் சிக்கியுள்ளது.வறண்ட நிலங்களை காண முடியாமல், ரியல் எஸ்டேட் அதிபர்களுக்கு, கூறு போட்டு, விவசாய நிலங்களை, விவசாயிகள் விற்று வருகின்றனர்.இந்நிலையில், வறட்சியிலும் அதிக விளைச்சலை தரக்கூடிய, எள், கரும்பு உள்ளிட்ட பயிர்களை, விவசாயிகள் சாகுபடி செய்தனர்.ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே, நல்லாம்பட்டியில், பேரிச்சை மரம் வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.வறட்சியிலும், பேரிச்சையின் விளைச்சல் ஜோராக இருப்பதாலும், அதிக பேரிச்சம் பழம் கிடைப்பதாலும், விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். இதுகுறித்து நல்லாம்பட்டி விவசாயி அப்துல் கூறியதாவது:தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணாபுரம் பகுதியில் இருந்து, பேரிச்சை மர கன்றுகளை விலைக்கு வாங்கி, நல்லாம்பட்டியில் வளர்த்து வருகிறேன். பொதுவாக, பாலைவனத்தில், காற்றின் ஈரப்பதம், காற்றையும் சுவாசித்து, ஓங்கி வளரும் தன்மையை, பேரிச்சை பெற்றுள்ளது.ஈரோடு மாவட்டத்தில் நிலவும் வறட்சியிலும், பேரிச்சை மரம் நன்கு வளர்கிறது. சொட்டு நீர் பாசனத்தின் மூலம், பேரிச்சை மரக்கன்றுகளை வளர்த்து வருகிறேன். தர்மபுரியில், ஹைபிரைடு மரங்கள் ஒரு கன்று, 2,500 ரூபாய்க்கும், சாதாரண கன்று ஒன்று, 60 ரூபாய்க்கும் விற்பனையாகிறது.நன்கு வளர்ந்த ஹைபிரைடு பேரிச்சை மரம், ஆறு ஆண்டு வரையும், சாதாரண ரக மரம், மூன்று ஆண்டும், பேரிச்சையை தரும். ஒரு கிலோ பேரிச்சை, 200 முதல், 230 ரூபாய் வரை விற்பனையாவதால், பேரிச்சை மர வளர்ப்பில் நட்டம் ஏற்படுவது குறைவு.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

10th dec 2012 P.M

**தமிழகத்தில் ரசாயன உரங்கள் பயன்பாடு குறைகி றது:பயிரிடும் பரப்பளவு குறைந்து வருவதால் ...**



கோபி:தமிழகத்தில் போதிய அளவிற்கு பருவமழை பெய்யாதது, விளைநிலங்கள் குடியிருப்புகளாக மாறுவது போன்ற காரணங்களால், ரசாயன உரங்களின் பயன்பாடு குறைந்துள்ளது.

பாசன வசதி:தமிழகத்தை பொறுத்தவரை, டெல்டா பாசனத்தில், சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை என, 11 மாவட்டங்கள் பயன் பெறுகின்றன. இப்பகுதிகளில் 12.50 லட்சம் ஏக்கர் பரப்பு, பாசன வசதி பெறுகிறது.பவானிசாகர் அணை மூலம் தடப்பள்ளி,அரக்கன்கோட்டை பாசன பகுதிகள், எல்.பி.பி., வாய்க்கால், காலிங்கராயன் பாசனங்கள் மூலம், 1.50 லட்சம் ஏக்கர் பரப்பு பாசன வசதி பெறுகிறது.

நெல், கரும்பு, மஞ்சள், மரவள்ளி, மானாவாரி பயிர்கள், பயிறு வகைகள் என, ஆண்டுக்கு இருபோகம் சாகுபடி செய்யப்படுகிறது.பாசன பகுதிகளில் மண் அமைப்புக்கு ஏற்றவாறு, தழை, மணி, சாம்பல் சத்து அடங்கிய என்.பி.கே., உரம், யூரியா, சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ், டி.ஏ.பி., மற்றும் சல்பேட், கலப்பு உரங்கள் போன்ற ரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.தமிழகத்தில், ஆண்டுக்கு, 1.70 லட்சம் டன் ரசாயன உரம் பயன்படுத்தப்படுகிறது. பரிந்துரைக்கப்பட்டதை விட தேவைக்கு அதிகமாக ரசாயன உரம் பயன்படுத்துவதில், ஈரோடு, சேலம், திருச்சி, கோவை மாவட்டங்கள் முன்னிலையில் உள்ளன.

மண் பரிசோதனை :தேவைக்கு அதிகமாக உரம் பயன்படுத்தப்படுவதை குறைக்கவும், மண்ணில் உள்ள சத்துக்களை அறிந்து அதற்கேற்ப உரமிடவும், மண் பரிசோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த, இரண்டு ஆண்டுகளாக ஈரோடு மாவட்டத்தில், 43 ஆயிரம் மண் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. ரியல் எஸ்டேட் அதிகரிப்பு, பருவமழை இன்மையால், பாசனப் பரப்பு குறைந்து விட்டது. தமிழகத்தில், 1.23 லட்சம் டன் அளவிற்கே உரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வேளாண் தரக்கட்டுப்பாட்டு அலுவலர் ஒருவர் கூறியதாவது:தமிழகத்தில் ஆண்டுக்கு, சராசரியாக 1.70 லட்சம் டன் ரசாயன உரம் பயன்படுத்தப்பட்டு வந்தது. ரசாயன உரங்களை பயன்படுத்துவதில், ஈரோடு, சேலம், திருச்சி, கோவை மாவட்டங்கள் முன்னிலையில் உள்ளன.மண் பரிசோதனை, இயற்கை உரங்களை பயன்படுத்த விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது. மண் பரிசோதனை, இயற்கை உரங்களின் பயன்பாடு அதிகரிப்பால்,

தமிழகத்தில் நடப்பாண்டு, 1.23 லட்சம் டன் உரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## மாங்காய் விலை வீழ்ச்சி : கவலையில் விவசாயிகள்

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவில்லிபுத்தூர் செண்பகதோப்பு பகுதி மா மரங்களில், தேன் பூச்சி தாக்குதலால், காய்களுக்கு விலையின்றி, விவசாயிகள் பாதிக்கின்றனர். ஸ்ரீவில்லிபுத்தூர், மம்சாபுரம், செண்பகதோப்பு பகுதிகளில், 200க்கு அதிகமான ஏக்கர்களில், மா மரங்கள் உள்ளன. இங்கு விளையும் மாம்பழங்கள், கேரளா உட்பட பல இடங்களுக்கும் அனுப்பபடுகிறது. தற்போது தேன் பூச்சி தாக்குதல் அதிகரிப்பால், சில மரங்களில் மட்டுமே, மாங்காய் விளைந்துள்ளது. மாங்காய்களில் கருப்பு நிற புள்ளிகள் உள்ளன. இதனால் விலையின்றி,விவசாயிகள் பாதிக்கின்றனர்.விவசாயி கந்தையா,""கோடைகாய் சில மரங்களில் தான் காய்க்கும். தேன் பூச்சி தாக்குதலால், இலைகள் காய்ந்து, காய்களில் கருப்பு நிறம் படிந்து இருக்கும். கிலோ 40 ரூபாய் விலை போகும் மாங்காய்,நோய் தாக்குதலால் 10 ரூபாய்க்கு விற்கும் நிலை உள்ளது ,'' என்றார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

11.12.2012 A.M

## டெல்டாவில் ரூ.4,500 கோடிக்கு மகசூல் இழப்பு ஏற்படும் அபாயம்



திருவாரூர் : காவிரியில் திறந்துவிடப்பட்ட தண்ணீர் போதாது, இம்மாத இறுதிக்குள் 30 டிஎம்சி தண்ணீர் விடுவிக்காவிட்டால் டெல்டா மாவட்டங்களில் பயிர்கள் கருகி 4,500 கோடி மகசூல் இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது என விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர். நடுவர் மன்ற இடைக்கால தீர்ப்பின்படி காவிரியில் தண்ணீர் திறந்துவிட கர்நாடகம் மறுத்து வருவதால் மேட்டூர் அணைக்கு நீர் வரத்து இல்லை. இதனால் ஜூன் 12ல் மேட்டூர் அணையை திறக்க முடியாமல் போனதால் குறுவை சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. ஒரு போக சம்பா சாகுபடியை செய்ய மேட்டூர் அணை செப்டம்பர் 17ம் தேதி திறக்கப்பட்டது.

இந்த தண்ணீரால் டெல்டா மாவட்டங்களில் 15 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. குறைந்த நீர் வரத்தால் அணையின் நீர்மட்டம் குறைய தொடங்கியது. உச்ச நீதிமன்றம், காவிரி நதிநீர் ஆணையம், காவிரி நதி கண்காணிப்புக்குழு ஆகியவை தமிழகத்திற்கு தண்ணீர் திறக்க வலியுறுத்தியும் கர்நாடக அரசு தொடர்ந்து தண்ணீர் திறக்க மறுத்து வருகிறது.

இதனால் கர்நாடக அரசை கண்டித்து கடந்த 7ம் தேதி டெல்டா மாவட்டங்களில் பஸ், ரயில் மறியல் போராட்டம் நடைபெற்றது. கலெக்டர் அலுவலகங்களில் நடைபெறும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டங்களிலும் விவசாயிகள் தண்ணீர் பெற்றுத்தர வலியுறுத்தி கோரிக்கை வைத்து வருகின்றனர். நாகை மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் சம்பா பயிர்கள் கருகி வரும்

வேதனையில் 4 விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர்.

இந்நிலையில் தற்போது கர்நாடகத்தில் கோர்ட் உத்தரவுப்படி 10,000 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு மேட்டூர் அணையை வந்தடைந்துள்ளது. இந்த தண்ணீர் காவிரி மற்றும் வெண்ணாறுகளில் ஒரு நாளைக்கு மட்டுமே திறக்க போதுமானதாக இருக்கும். இந்த தண்ணீரும் கிளை கால்வாய்களில் சென்று வயல்களுக்கு பாயாது. டீசல் இன்ஜின் வைத்திருப்பவர்கள் மட்டுமே இந்த தண்ணீரை வயல்களுக்கு பாய்ச்ச முடியும்.

இந்நிலையில் காவிரி கண்காணிப்பு குழு 12 டி.எம்.சி. தண்ணீர் வழங்க வேண்டும் என கர்நாடக அரசுக்கு உத்தரவு பிறப்பித்தது. அதே உத்தரவை நேற்று உச்ச நீதிமன்றமும் உறுதி செய்து தீர்ப்பாக அளித்துள்ளது. ஏற்கனவே கர்நாடக அரசு காவிரி கண்காணிப்புகுழு, உச்ச நீதிமன்ற தீர்ப்பை பின்பற்றவில்லை.

இது குறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருவாரூர் மாவட்ட செயலா ளர் கோட்டூர் பாண்டியன் கூறுகையில், "12 டி.எம்.சி. தண்ணீர் என்பது 10 நாட்களுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும். தமிழக அரசின் சார்பில் இம்மாதத்திற்கு கேட்கப்பட்ட 30 டி எம்சி தண்ணீரை விடுவிக்க வேண்டும். அதே போல ஜனவரி மாதத்திற்கு உரிய தண்ணீரையும் பெற்றுத்தர வேண்டும். கர்நாடகா மற்றும் மேட்டூர் அணைகளின் நீர் இருப்பையும், சம்பா சாகுபடி நிலை குறித்தும் மத்திய அரசு அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்ய வேண்டும்" என்றார்.

திருவாரூர் மாவட்டம் கானூரரை சேர்ந்த விவசாயி ஆனந்த் கூறுகையில், "மேட்டூர் அணை திறக்கப்பட்டதும் சம்பா நெல் சாகுபடியை செய்ய தொடங்கினோம். இன்று 70 நாள் ஆன நிலையில் சூல் பிடிக்கும் தருணத்தில் உள்ளது. இந்த நேரத்தில் தண்ணீர் இல்லாததால் நெல் அனைத்தும் கருக்காவாக (பதராக) மாற வாய்ப்புள்ளது. இதனால் ஏக்கருக்கு ரூ.30,000 நஷ்டம் ஏற்படும். எனவே, டெல்டா மாவட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள 15 லட்சம் ஏக்கருக்கு ^4,500 கோடி மகசூல் இழப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நகைகளை அடகு வைத்தும், தனியாரிடம் அதிக வட்டிக்கு கடன் பெற்றும் விவசாய பணிகளை செய்துள்ளோம். உடனடியாக எங்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும்" என்றார்.

10th dec 2012 P.M

**பிசான சாகுபடி மேற்கொள்வதில் தொடரும் சிக்கல் தாமி ரபரணி பாசனத்தில் தூத்துக்குடி புறக்கணிப்பு விவசாயிகள் கவலை**

ஸ்ரீவைகுண்டம், : பிசான சாகுபடிக்கு தண்ணீர் வழங்குவதில் தூத்துக்குடி மாவட்டம் புறக்கணிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதை சரிசெய்ய உடனடியாக அரசின் அறிவிப்பை அமல்படுத்தி தண்ணீர் தர வேண்டுமென விவசாயிகள் கோரிகை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து தாமிரபரணி நதிநீர் பாதுகாப்பு பேரவை அமைப்பாளர் நயினார்குலசேகரன் ஸ்ரீவைகுண்டம் பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் நம்பிராஜனிடம் கொடுத்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது,

தாமிரபரணி பாசனத்தில் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 86 ஆயிரத்து 107 ஏக்கர் நிலங்களுக்கு பிசான சாகுபடிக்கு அனுமதியளித்து பாபநாசம் அணையிலிருந்து தண்ணீர் திறக்க நவம்பர் 15ம் தேதி அரசு ஆணைபிறப்பித்தது. ஆனால் இதுவரை தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள நிலங்களுக்கு தண்ணீர் தரப்படவில்லை. அரசின் அனுமதியை நம்பி விதை நெல்லையும் தேவையான உரங்களையும் வாங்கிய விவசாயிகளுக்கு நாற்று பாவக்கூட பாசன குளங்களில் தண்ணீர் இல்லாத அவல நிலை உள்ளது.

பாபநாசம் அணையிலிருந்து சுமார் 1000 கனஅடி தண்ணீருக்கும் குறைவாகவே தண்ணீர் எடுக்கப்படுகிறது. இந்த தண்ணீரும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 7 பிரதான வாய்க்காலில் மட்டும் திறந்து விடப்பட்டு தூத்துக்குடி மாவட்ட பாசன நிலங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. ஏற்கனவே கார் மற்றும் முன்கார் சாகுபடியை இழந்த விவசாயிகள் பிசான சாகுபடியையும் இழக்க வேண்டியது வருமோ என்ற கலக்கத்தில் உள்ளனர். அரசால் அறிவிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் பாரபட்சம் இல்லாமல் தண்ணீர் தரவேண்டியது பொதுப்பணித்துறை அதிகாரிகளின் பொறுப்பாகும். எனவே பாபநாசம் அணையிலிருந்து கூடுதலாக தண்ணீர் திறப்பதுடன் மணிமுத்தாறு அணையிலிருந்தும் தண்ணீர் திறந்து தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளை காப்பாற்ற வேண்டும்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்ட நிர்வாகம் அலட்சியம்

தூத்துக்குடி மாவட்டத்தில் கார் மற்றும் முன்கார் சாகுபடி காலங்களில் நிலங்களுக்கு தண்ணீரை பெற்றுத்தராததால் விவசாயிகள் ஆர்பாட்டம், சாலை மறியல், உண்ணாவிரதம் உள்ளிட்ட

பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர். ஆனால் இறுதி வரை தண்ணீர் வழங்காததால் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. தற்போது பிசான சாகுபடிபயிரும் அரசு அறிவித்தபடி தண்ணீரை பெற்றுத்தருவதில் மாவட்ட நிர்வாகம் அலட்சியமாக செயல்படுகிறது. தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் வழங்குவதில் காட்டும் ஆர்வத்தையும் அவசரத்தையும் விவசாயிகளுக்கு தண்ணீர் பெற்று தருவதிலும் காட்ட வேண்டும் எனவும் மக்கள் பிரதிநிதிகளும் இதற்காக குரல் கொடுக்க வேண்டும் எனவும் விவசாயிகளும் சமுக நல ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.